பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: மார்கழி 8 (23—12—67) சனி ★ வெளியூர்: மார்கழி 9 (24—12—67) ஞாயிறு [இதழ்: 160

கொள்கையில் உறுதியாக நின்று பணியாற்றுக

உட்பூசலும் வெறித்தனமும் இக்காலத்தில் ஏற்றவையல்ல

நல்ல சனநாயக மரபுகளை உருவாக்குக---

அரசியல்வாதிகளுக்கு அறிஞர் அண்ணா வேண்டுகோள்

மன்னார்குடி, டிச. 22—

"நாட்டில் சனநாயகம் நீடித்திருக்க வேண்டுமானால், அரசியல்வாதிகள்—அவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் தங்கள் கட்சியின் கொள்கைகளிலே உறுதியாகவும், தடுமாற்றமில்லாமலும் இருக்க வேண்டும்; சுயநல நோக்குடன், உட்கட்சிப்பூசல்களில் அவர்கள் ஈடுபடுவது நல்லதொரு சமுதாயம் உருவாவதற்கு உதவாது.

"உட்பூசல்களும், வெறித்தனமும், ஒருகாலத்தில் மதவாதிகளிடையேதான் நிலவின; ஆனால் இப்போது மதங்களெல்லாம் மறைந்துவருகின்றன!

"சனநாயகம் நல்ல முறையில் உருவாகக் கருத்து வேறுபாடுகள் கொண்ட அரசியல் கட்சியினர், உறுதியாக நின்று அவரவர் கொள்கைளுக்காக வாதாடுவதில் ஈடுபடவேண்டும்; நாட்டில் நல்ல அரசியல் மரபை உண்டாக்கவும் உண்மை சனநாயகம் மலரவும் எல்லா அரசியல் கட்சியினரும் பாடுபடவேண்டும்"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், அரசியல்வாதிகளைக் கேட்டுக்கொண்டார்.

மன்னார்குடி நகராட்சி மன்ற நூற்றாண்டு விழாவினைத் துவக்கி வைத்து அண்ணா அவர்கள் உரையாற்றுகையிலேயே இவ்விதம் குறிப்பிட்டார்; அவர் மேலும் கூறியதாவது:—

"அரசியல்வாதிகள்—தாங்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும், தங்களுக்குள்ளே எழும் சச்சரவுகளை வெளிப்படுத்திக்கொள்ளக்கூடாது; கட்சிக் கொள்கையினிடத்திலே பற்றும் விசுவாசமும் கொண்டிருக்க வேண்டும்.

இந்த நேரத்தில் சனநாயகம் குலைந்துவிட்டால், அதன்பிறகு நாட்டில் சனநாயகக் கோட்பாட்டைப் பிழைக்கவைக்க முடியாது.

பர்மா, இந்தோனேஷியா, நாடுகளில் ஒரு காலத்தில் சனநாயகம்தான் இருந்தது; அது பின்னர் எந்த நிலையடைந்துவிட்டது என்பதை நாம் எண்ணிப் பார்த்து, அதை ஓர் எச்சரிக்கையாகக் கொள்ளவேண்டும்.

உள்ளாட்சி மன்றங்களில் உறுப்பினராக இருப்போர், நாட்டில் நல்ல சனநாயக மரபுகளை உருவாக்கக்கூடிய வகையில், உள்ளாட்சி மன்றங்களைப் பயிற்சிக் களங்களாகக் கொண்டு மக்களுக்குப் பணியாற்ற வேண்டும்."

நகராட்சித் தேர்தல்கள்

1968 பிப்ரவரியில் நடைபெறும்

சென்னை, டிச. 22

தமிழகத்தில் கும்பகோணம் தவிர்த்து மற்ற எல்லா நகராட்சிமன்றங்களுக்கும், 1968 பிப்ரவரியில் தேர்தல் நடக்கும்.

கும்பகோணம் நகராட்சித் தேர்தல் மட்டும் மார்ச்சு மாதத் துவக்கத்தில் நடைபெறும்.

1967 செப்டம்பர் 30-ம் நாள் வரையில் திருத்தம் செய்யப்பட்ட சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பட்டியல் அடிப்படையில் தேர்தல் நடைபெறும்.

1967 அக்டோபர் முதல் தேர்தலுக்கான வேட்பாளர் விண்ணப்பம் பெறுகிற கடைசி நாள் வரை பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் பட்டியலும் தனியே அச்சிட்டு வழங்கப்படும். அதில் உள்ள வாக்காளர்களும் வாக்களிக்கலாம்.

காமராசருக்கு எதிராக வெளிநாட்டு உதவி இல்லை

மீண்டும் உறுதிப்படுத்துகிறார் அமைச்சர் சவாண்

புதுடில்லி, டிச. 22—

"கடந்த பொதுத் தேர்தலின் போது காமராசருக்கு எதிராக வேலைசெய்ய வெளிநாட்டுத் தூதுவரகங்களின் உதவியோ, ஒத்துழைப்போ கிடைத்ததற்கான சான்று எதுவும் கிடையாது"

என்று, உள்துறையமைச்சர் திரு ஒய். பி. சவாண், நாடாளுமன்ற மேலவையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

இதேபோல், மக்களவையிலும் ஏற்கனவே பதிலளிக்கப்பட்டிருக்கிறது.

நிலைபிறழாதவர்-- நிலைமைகளைச் சமாளிப்பவர்!

அறிஞர் அண்ணா பற்றி சவாண்

தமிழகத்தில், மாணவர் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளையொட்டி அச்சமும், பீதியும் தோன்றியிருப்பதாக மாநிலங்களவையில், மதூர் என்னும் இராஜஸ்தான் மாநிலக் காங்கிரசு உறுப்பினர், உள்துறை அமைச்சர் சவாணிடம் முறையிட்டார்; அது போது, அமைச்சர் சவாண் குறிப்பிட்டதாவது:—



"தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை நடுநிலைமை தவறாத மனிதர்; நிலைமைகளைச் சமாளிக்க அவரால் முடியும்; தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டுதான் இருப்பார்; இந்த மன்றத்தின் விருப்பப்படி நானும் அவருடன் இதுபற்றிப் பேச முயற்சிக்கிறேன்."

அறிவிப்பு

வருகிற திங்கட்கிழமை (டிச. 25) அலுவலக விடுமுறையாகையால் 'நம் நாடு' அடுத்த இதழ் 26—12—67 அன்று சென்னையிலும், மறுநாள் வெளியூர்களிலும் கிடைக்கும்.

—பொறுப்பாளர்

'டால்மியாபுரம்' ஒழியாதாம்!

மாறன் கேள்விக்கு டில்லி பதில்

புதுடில்லி, டிச. 22—

"டால்மியாபுரம் இரயில் நிலையத்தின் பெயரை, 'கல்லக்குடி' என்று மாற்றுவதற்கில்லை"

என்று கழக உறுப்பினர் முரசொலி மாறனின் கேள்விக்குப் பதிலளிக்கையில், மத்திய அரசின் இரயில்வே அமைச்சர் பூனச்சா கூறினார்.

"மதுரை—விருதுநகர்ப் பகுதியில், கல்லக்குடி என்ற பெயரில் ஒரு இரயில் நிலையம் இருப்பதால் இந்தப் பெயர் மாற்றத்தினால் குழப்பம் நேரலாம்" என்று அவர் கூறினார்.

'வானொலி'க்கு ஒப்புதல்!

புதுடில்லி, டிச. 23—

"தமிழகத்திலுள்ள வானொலி நிலையங்களை 'ஆகாஷ்வாணி' என்றழைப்பதை மாற்றி, 'வானொலி' தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்தவேண்டும்" என்று தமிழக அரசு தெரிவித்த கோரிக்கைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

'வானொலி' என்ற பெயர் மாற்றம் தேவை என்பதை, திராவிட முன்னேற்றக் கழகம் பதவி ஏற்பதற்குமுன்பிருந்தே எழுப்பிவந்தது; இந்தக் கோரிக்கையை ஏற்க வேண்டுமெனத் தமிழகச் செய்தித்துறை அமைச்சர் சத்தியவாணி முத்து, மத்திய அரசின் தகவல் துறை அமைச்சர் கே. கே. ஷாவிடம் தெரிவித்தார்.

கே. கே. ஷா இதற்கு வாய்மொழி ஒப்புதல் தெரிவித்திருந்தார்; இன்று தமிழக அரசின் கோரிக்கைக்கு மத்திய அமைச்சரவையே ஒப்புதல் அளித்தது.

எஸ். எஸ். மாரிசாமி வெளிநடப்பு

புதுடில்லி, டிச. 22—

இன்று, நாடாளுமன்ற மேலவையில் ஆட்சிமொழி மசோதா வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது, தமிழக சுதந்தரக் கட்சி உறுப்பினரான திரு. எஸ். எஸ். மாரிசாமி, 'இந்த மசோதா நாட்டு ஒற்றுமைக்குக் கேடு பயப்பதாகும்' என்று கூறி அவையிலிருந்து கூறினர்.

காதில் விழுந்தது!

"இந்த நான்கைந்து நாள் இந்தி எதிர்ப்பு நிகழ்ச்சிகளை வெளியிட்டதில், ஒரு காங்கிரசுப் பத்திரிகை 'பிளிடிங் மெட்ராஸ்' போல் வண்ணம் மாறியதனைக் கவனித்தாயா?"

"ஆமாம்; பார்த்தேன்; 'ஆட்சியின் அலங்கோலம் பாரீர்' என்று 'காலர் லைனி'ல் தலைப்பினைத் தந்துவிட்டு, கீழே, 'கணவன்—மனைவி குடும்பத் தகராறு' என்ற பாணியில் செய்தி வெளியீட்டினை அமைத்துக் கொண்ட அந்த 'அம்பர் சர்க்கா' பத்திரிகை, மாணவர்கள் இந்தி எதிர்ப்பு பற்றி

"ஆட்சி மொழித் திருத்த மசோதாவை எதிர்த்துத் தேசிய மாணவர்கள் ஊர்வலம்"

என்று ஆரம்பித்துக் கடைசியில்,

'மொழிப் போர்' மேலும் தீவிரமாகிறது

என்றும்

'தொடர்ந்து மாணவர் போராட்டம்'

என்றும்

'எக்ஸ்பிரஸ் இரயிலை நிறுத்தி ஆர்ப்பாட்டம்'

என்றும் அடுத்தடுத்து செய்திகள் வெளியிட்டு வருவதையும் பார்த்தேன்."

"அடே அப்பா! என்ன கனிவு! என்ன பண்பு! எவ்வளவு அக்கறை! 'மொழிப் போர்' என்ற சொல்லே புல்லரிக்கிறதே—இல்லையா?"

"ஆமாம்; ஏன் இது உங்களை இவ்வளவுக்குக் கவர்ந்திருக்கிறது?"

"கவராமல் என்ன செய்யும்? மொழித் திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டதை வெற்றி களிப்புடன் எட்டுக் கலத் தலைப்பில்—வோட்டு விவரத்துடன் போட்டுப் பூரித்தது சில நாட்களுக்கு முன்னால்! 'திருத்த மசோதா கவலையைத் தருகிறது' என்று காமராசர் வாய் திறக்கும் வரையில், புதுடில்லி நடவடிக்கைகள் பற்றிக் கண்டும் காணாமல் இருந்தது! இப்போது வந்து, மாணவர் கிளர்ச்சிகளை 'மொழிப் போர்' என அன்புப் பெயரிட்டு அழைக்கிறது! வேடிக்கையான வேதனை!"

"அதுகூடப் போகட்டும்; எனக்கு இன்னுமொரு சந்தேகம்; இப்போது இங்கே மாணவர்கள் கேட்பது—தி. மு. கழகம் கோருவதுபோல்—'அரசியல் சட்டமே திருத்தப்பட வேண்டும்' என்பது; ஆனால், காங்கிரசின் பேரால் புதுடில்லிக்குப் போய்வந்த மாணவர்கள், 'அரசியல் சட்டத் திருத்தம் வேண்டாம்' என்றார்கள்; அது மட்டுமல்ல; அக்கட்சியின் ஒன்றிரண்டு உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் இந்தியை எதிர்த்து மூச்சைக்கூட சற்று வேகமாக விடவில்லை; ஆனால் இங்கே உள்ள 'அம்பர் சர்க்கா' பத்திரிகையோ, இந்தி எதிர்ப்புப் போராட்ட நிகழ்ச்சிகளுக்குத் திடீரென 'இட தானம்' செய்துவருகிறது; இது அரசியல் சூட்சுமமா? வியாபாரத் தந்திரமா?"

"இரண்டும் இருக்கலாம்; ஆனால் நான் கூறப்போகும் மூன்றாவதுதான் முக்கியம்; 'தமிழகத்தில் தி. மு. கழகம் ஆட்சியில் இருக்கும்போது 'ஏதாவது' நடக்க வேண்டும்' என்று விரும்பினர்; ஏதும் நடக்கவில்லை; 'சரி; நடக்கின்ற இதனையாவது பயன்படுத்துவோமே' என்று பயன்

(4-ம் பக்கம் பார்க்க)

இவர்களும் மனிதர்கள்தான்--

ஆனால்

இதயமுள்ளவர்கள்!

'பெரும்பான்மை' என்ற ஒரே கண்மூடித்தனத்தில் கலப்படம் செய்யப்பட்டு--நிறைவேற்றப்பட்டு மக்களவையிலிருந்து மாநிலங்களவைக்குச் சென்றிருக்கும் ஆட்சிமொழித் திருத்த மசோதாமீது அங்கே பேசியிருக்கும் உறுப்பினர்கள் சிலருடைய கருத்துக்கள், இங்கு தொகுத்துத் தரப்பட்டிருக்கின்றன.

"பொதுமக்கள் வாக்கெடுப்புமூலம் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் உறுப்பினர்களுக்கு நாங்கள் எவ்வகையிலும் பிந்தியவர்களல்லர்" என்பதைக் காட்டிக்கொள்வதுபோல், மொழித் துறையில் பாதிக்கப்பட்டிருப்போரின் இதயக் குமுறலை—காரண காரிய வாதங்களுடன் எடுத்து விளக்கியிருக்கும் மாநிலங்களவை உறுப்பினர்கள் சிலரது உரைகளாகும் இவை :—

கங்கா சரண் சின்கா (சுயே) :—இந்தத் திருத்த மசோதாவை வீணாக ஒரு கௌரவப் பிரச்சினையாகக் கருதாமல் திரும்பப் பெறுங்கள் ; மொழி போன்ற விவகாரங்களில், 'பெரும்பான்மை' என்ற ஒரே அடிப்படையில் மட்டும் எந்த முடிவும் எடுக்கப்படக்கூடாது. எல்லாத் தரப்பினருக்கும் ஏற்றதாக அந்த முடிவு இருக்கிறதா எனப் பார்ப்பதுதான் முக்கியம்.

"இந்தி பேசாத மக்களிடையே இந்தி மொழி திணிக்கப்படுவதை என்னால் எந்த நிலையிலும் வரவேற்க முடியவில்லை. சட்டமன்றங்களுக்கு வெளியேயும், மொழிப் பிரச்சினைக்கு முடிவு காண்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.'

கே. தாமோதரன் (கம்.—வலது) :—வேண்டாமென்பவர்கள்மீது இந்தி திணிக்கப்பட வேண்டியதில்லை. எல்லா மொழிகளுக்கும் சம உரிமை அளிக்கப்படல் வேண்டும்."

டாக்டர் கோபால் சிங் (நியமன உறுப்பினர்) :—"இந்தி வெறியர்கள் சிலர், 'இந்திதான் தேசிய மொழி' என்று கூறுகிறார்கள் ; அப்படியானால், மற்ற இந்திய மொழிகளெல்லாம் தேசிய விரோத மொழிகளா ?

"சுவிட்சர்லாந்து நாட்டில், ஒரு சதவிகிதத்தினர் பேசும் ஒரு மொழிகூட, 'அரசியல் அந்தஸ்து' தரப்பட்டு ஆட்சிமொழியாக இருக்கிறது.

"மத்திய அரசில் வேலை கோருபவர்களுக்கு இந்தி ஆங்கிலம் ஆகிய இரண்டும் கட்டாயமாக்கப்படல் வேண்டும்."

சகுந்தலா பரஞ்ச்பாய் :— "காலவரையறையின்றி ஆங்கிலம்தான் நீடிக்கவேண்டும் ; ஏனெனில், அதுதான் இந்த நாட்டின் ஒற்றுமைக்கு வழி வகுக்கும்."

கட்டபொம்மன்

சொன்னதைச்

சட்டமாக்கிக் காட்டியவர்கள் யார் ?

★

"வானம் பொழியுது—பூமி விளையுது—கம்பெனிக்கு ஏன் வரி ?" என்று கூறியதைப் படம் எடுக்கவும், பாடல் எழுதவும், பாட்டு பாடுவதற்குத்தான் கட்டபொம்மன் பயன்பட்டானே தவிர, சட்டம் செய்தது யார் ? எட்டப்பன் பரம்பரையல்ல—நாங்கள் ! கட்டபொம்மன் சொன்னதைச் சட்டமாக்கிக் காட்டியவர்கள் நாங்கள் !"

—அறிஞர் அண்ணா

(சேலம் சிறப்புக் கூட்டத்தில்)

வேலியே

பயிரை மேய்கிறது !

சட்டத்தை மதிக்காத சட்டமன்ற காங்கிரசுக் கட்சித் தலைவர் !

அரசாங்கத்துக்குச் சேர வேண்டிய கட்டணங்களைக் கட்டாதவர்கள் இன்றைக்குக் காங்கிரசுத் தலைவர்களாகவும் சட்டமன்ற உறுப்பினர்களாகவும் இருக்கும் அவமானத்தைப் பஞ்சாப் சட்டமன்றம் அறிவித்தது.

மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்படுவதற்கு முன்னர் இருந்த பெப்சு மாநிலத்தில் அமைச்சர்களாக இருந்த 13-பேர், தாங்கள் செலவழித்த மின்சாரத்திற்கான கட்டணத்தை இதுவரை அரசாங்கத்துக்குக் கட்டவில்லை ; அவர்களில் சிலர், இன்றையக் காங்கிரசில் முக்கிய இடம் பெற்றிருக்கிறார்கள்.

கியான் சிங் ரேர்வாலா—(பஞ்சாப் சட்டமன்றக் காங்கிரசுக் கட்சித் தலைவர்) ரூ. 4,001.

கியானி ஜெயில் சிங்—(பஞ்சாப் காங்கிரசுத் தலைவர்) ரூ. 1,404.

சட்டம் செய்கிறவர்களே சட்டத்தை மதிக்கும் அழகு இது !

இவர்கள், கட்சித் தலைவர்களாக வேறு இருக்கிறார்கள் !

கிருபளானிக்கு கவர்னர் பதவி?

புதுடில்லி, டிச. 23—

மேற்கு வங்க மாநிலத்திற்கு கிருபளானி தம்பதிகளை அழைத்துக் கொள்ள, மேற்கு வங்க முதலமைச்சர் டாக்டர் பி. சி. கோஷ் உத்தேசித்திருக்கிறார்.

"எதிர்க் கட்சியினரின் கோரிக்கைக்கு இணங்க, தர்மவீராவை மத்திய அரசாங்கம் திரும்ப அழைத்துக்கொண்டால், அவருக்குப் பதிலாக ஆச்சார்யா கிருபளானியை கவர்னராக நியமிக்கலாம்" என்று தர்மவீரா யோசனை கூறியிருக்கிறார்.

"மேற்கு வங்கத்தில் நிர்மாண வேலைகளை மேற்கொள்ளும் பணியினை திருமதி சுசேதா கிருபளானியிடம் ஒப்படைக்கலாம்" என்று காங்கிரசுத் தலைவர்களை டாக்டர் கோஷ் வேண்டிக்கொண்டிருப்பதாக அறியப்படுகிறது.

தமது அமைச்சரவையில் காங்கிரசுக் கட்சி சேருமானால், திருமதி சுசேதா கிருபளானிக்கு இலாகா இல்லாத துணை முதலமைச்சர் பதவியை அளிக்கத் தயாராக இருப்பதாக டாக்டர் பி. சி. கோஷ் கூறியிருக்கிறார்.

சின்ன விஷயம்

பதரில் அரிசி வருமா என்ன ?

இது ஒன்று கற்றுக்கொண்டிருக்கிறார் இந்திரா காந்தி ;—இந்தி பேசாத மாநிலம் ஏதாவது ஒன்றுக்குச் சென்றால், அந்த மாநில மொழியில் இரண்டு வாக்கிய உச்சரிப்பைத் தெரிந்து கொண்டு பேசுவது !

எதிரிலே கூடியிருக்கின்ற அண்டங்காக்கைகள், அதை, 'ஆகா, ஊஹூ' என்று அமர்க்களப் படுத்திவிடுகின்றன !

இந்த ஆண்டு கோடைக் காலத்தில் குளுமை பெறத் தமிழ்நாட்டுக் கோடைக்கானலுக்கு வந்த இந்திரா அம்மையார், ஒரு கூட்டுறவுப் பண்டகசாலைக்குச் சென்றபோது, குழந்தைகளுக்கு மிட்டாய் வழங்கினார்களாம் ; அப்போது அந்தக் குழந்தைகளை ஒவ்வொன்றாக அழைக்க,

'ஒன்னு ஒன்னு வா !'

என்றார்களாம் ; போதாதா ! அதைக் கட்டங்கட்டிச் சிறப்புச் செய்தி ஆக்கினார்கள் !

இப்போதோ, புதுடில்லியில், 'மைசூர் அவுஸ்' என்ற புது மாளிகையைத் திறந்துவைத்து,

"இந்தக் கட்டடத்தைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன் ; மைசூர்க்காரர்கள் ரொம்ப நல்லவர்கள் ; அவர்கள் நலமாக வாழ என் வாழ்த்துக்கள் !"

என்று, மைசூரின் கன்னட மொழியில் திருவாழ்த்துத் தெரிவித்தார்களாம் !

ஆகா, என்ன அக்கறை ! என்ன அக்கறை !

சித்திரைக்குச் 'சித்தப்பா—பெரியப்பா !' என்கிறவர்கள், வைகாசியில், 'வாங்காணும்—போங்காணும்' என்பார்களாம் !

காரியம் முடிந்ததும், கறிவேப்பிலைபோலத் தூக்கி எறிகிறவர்கள்தானே இவர்கள் ?

இந்தியில்தான் மூலப்பேச்சு ! பேசிக்கொண்டே வந்தவர், திடீரென்று கன்னடத்தில் இரண்டு மூன்று வாக்கியங்கள் பேசிவிட்டு—பிறகு இந்திக்குத் தாவி—முடிவில் ஆங்கிலத்தில் முடித்தாராம் !

"நான் இப்போது மும்மொழித் திட்டப்படி சரியாக நடந்துகொண்டிருக்கிறேன்" என்றாராம்—தலைமை அமைச்சர் !

இதுதான் வடநாட்டு வெறியர்களின் மும்மொழித் திட்டம் என்றால், அதன் அர்த்தம் நன்றாகப் புரிகிறது நமக்கு !

"எழுதுகிறது பெரிதல்ல ; இனம் அறிந்து சேர்க்கிறதே பெரிது" என்று—ஐந்தொகை எழுதும் அந்தக் காலத்துப் பெரியவர்கள் சொல்லுவார்கள் !

அதுபோல, யாரிடமோ கேட்டு—எழுதி—மனப்பாடம் பண்ணி—இரண்டு சொற்றொடர் அல்லது வாக்கியம் பேசிவிட்டால், அந்த மொழி வந்துவிட்டதாகவா அர்த்தம் ?

"அந்த அளவு இந்தி தெரிந்தால் போதும்" என்று சொல்லச் சொல்லுங்கள் பார்ப்போம் !

"விடிந்தால் கல்யாணம் ; இந்தா பிடி தாம்பூலம்" என்பதுபோலல்லவா இந்திக்காரர்கள் நடந்துகொள்ளுகிறார்கள் ! அவர்களைச் சொல்வானேன் ? மத்திய அரசாங்கம் மட்டும் என்ன வாழ்கிறதாம் ?

நாடாளுமன்றத்தில் நிறைவேறிய இந்தித் திணிப்பு மசோதா, இன்னும் மாநிலங்களவையில் விவாதிக்கப்படுகிறது. இதற்குள் விவசாய ஆலோசனைக் குழுவில், 'இந்தியில் மட்டுமேதான் விவாதம் நடக்கும்' என்று செகசீவன்ராம் சொல்லிவிட்டாரே ! அவர்கள் அவசரம் அவர்களுக்கு !

முடிச்சு அவிழ்க்கிறவனைப் போய், **'ஏண்டா முடிச்சவிழ்க்கிறாய் ?'** என்றால், **'என் அவசரம் எனக்கு ; உனக்கென்ன தெரியும் ?'** என்பானாம் !

அதைப்போல், அவர்கள் அவசரப்படுவதில், **'பொருள்'** இருக்கிறது ! இவர்கள் எந்த மொழிகளையெல்லாம் சேர்த்துக்கொண்டு, 'எல்லாம் இந்தி' என்றார்களோ, அதைப்போல், அவர்கள் எல்லாம், 'எங்கள் மொழி தனி ; இந்தி வேறு ; எங்கள் மொழியை அரசியல் சட்ட எட்டாவது பிரிவில் சேர்த்திடுக' என்கிறார்கள்.

மைதிலி, போஜ்புரி, இராஜஸ்தானி மொழிக்காரர்கள் உறுமிக் கொண்டிருக்கிறார்கள் ! வட பிகாரின் பெருவாரி மக்கள் பேசும் மொழியான மைதிலியை அரசியல் சட்டத்தில் சேர்க்க ஒரு போராட்டத் திட்டமே உருவாகிக் கொண்டிருக்கிறதாம் !

இந்த நிலையில், அவசரப்படாமல்—ஆர அமர பேசிக்கொண்டிருந்தால், இந்தி எங்காவது ஆட்சிமொழி ஆகுமா ?

ஆனால், 'மைசூர் அவுஸ்' என்ற ஆங்கிலப் பெயர் கொண்ட கட்டடத்தைத் திறந்துவைத்துக் கன்னட மொழியில் இரண்டு வாக்கியம் உதிர்த்த இந்திரா, அரசியல் சட்டத்தைச் சுட்டிக்காட்டி,

'மாநிலங்கள் இல்லையேல் மத்திய அரசு இல்லை ; மத்திய அரசு இல்லையேல் மாநிலங்கள் இல்லை'

என்றாராம் !

'மாநிலங்கள் இல்லையேல் மத்திய அரசு இல்லை' என்பது புரிகிறது ! 'மத்திய அரசு இல்லையேல் மாநிலங்கள் இல்லை' என்பதை, ஜீரணிக்க முடியவில்லை !

"ஒரு மாநிலத்துக்கு வந்த ஆபத்து நாட்டுக்கே வந்த மாதிரி" என்று நீலிக்கண்ணீர் வேறு வடித்து, தேசிய ஒருமைப்பாட்டைக் காத்திடக் குரல் கொடுத்தார்களாம் !

ஆலைக்காரனிடம் தவிட்டுக்கு மன்றாடித் தீட்டின அரிசியைக் கோட்டை விட்டமாதிரி, இந்திக்காகப் பரிந்து பேசிக்கொண்டு எதையெதையோ இழக்க இருக்கிறார்கள் !

என்னதான் இந்தியைப் பற்றிப் பேசட்டும்—அது **'ஒன்றும்'** ஆகப்போவதில்லை !

பாடிப் பாடிக் குத்தினாலும், பதரில் அரிசி வருமா என்ன ?

—பூரணன்

திருச்சியிலிருந்து தமிழ்ச் சுடர்

உலகத் தமிழ்மாநாட்டுக்கு வருகிறது

திருச்சி, டிச. 18—

சென்னையில் நடக்கவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டுக்கு திருச்சி தேசியக் கல்லூரி மாணவர்கள், தொடர் ஓட்டம் மூலம் தமிழ்ச் சுடர் எடுத்துச் செல்வர்.

இச்சுடர், திருச்சி தேசியக் கல்லூரியிலிருந்து சனவரித் திங்கள் 2-ஆம் நாள் புறப்படும்.

தேசிய கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. தி. சே. பாலசுப்பிரமணியம் இக்குழுவின் தலைவராகவும், த. மனோகரன் செயலாளராகவும் இருப்பர்.

இச்சுடர், முத்தமிழ்க் காவலர், மற்றும் உலகத்துப் புலவர்களடங்கிய குழு முன்பு, தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களிடம் கொடுக்கப்படும்.

மாணவர்கள் திருச்சியிலிருந்து தொடர் ஓட்டம் மூலம் சனவரித் திங்கள் 2-ஆம் நாள் புறப்பட்டு 5-ஆம் நாள் மாலை 3-மணிக்கு ஐலண்டுத் திடலை அடைவர்.

இச்சுடர், பெரம்பலூர்—விழுப்புரம்—செங்கற்பட்டு வழியாகச் சென்னை வந்தடையும்.

"இச்சுடர்க் குழு, உலகத் தமிழ் மாநாட்டுக் குழுவிடம் சுடர் எடுத்து வருவதற்கான அனுமதியினைப் பெற்றுள்ளது" என்று குழுச் செயலாளர் அறிவிக்கிறார்.

தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாய்கிறது!

புதுடில்லி நிர்வாகத்தின் இந்தி வெறி!

இந்தியை ஆட்சிமொழியாக்க அவசர அவசரமாக ஏற்பாடு

புதுடில்லி, டிச. 21—

மத்திய அரசின் நேரடி ஆட்சிக்கு உட்பட்டிருக்கும் டில்லி நிர்வாகம், தனது அலுவலகப் பணிகளை 1968 ஆகஸ்டு முதல் ஆங்கிலத்திலிருந்து இந்திக்கு மாற்ற எண்ணியுள்ளதாம் ; அதன் பிறகு, இந்தி தெரியாத அதிகாரிகளுக்கு, பதவி உயர்வு பாதிக்கப்படுமாம்.

டில்லி நிர்வாக அமைப்பின் உயர்மட்ட அதிகாரிகள் கூட்டத்தில் இத்தகைய முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

வருகிற சனவரி 26-ம் நாள் முதல் சமுதாயநலத்துறை — தொழிலாளர் துறை — கூட்டுறவுத் துறை ஆகியவற்றின் அலுவல்கள் இந்திக்கு மாற்றப்படுமாம்

கல்வித்துறை, உணவுப் பங்கீட்டுத் துறை ஆகியவைகளில் 1968 ஏப்ரல்முதல் இந்தி திணிக்கப்படுமாம்.

மத்திய அரசுடனும், இந்தி மாநிலங்களுடனும இந்தியிலேயே கடிதப் போக்குவரத்துக்கள் நடத்தப்படுமாம்.

இந்தி பேசாத மாநிலங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களுடன் இந்தி மொழிபெயர்ப்பும இணைக்கப்படுமாம்.

கல்வித் துறையின்கீழுள்ள பல்வேறு உயர்நிலைப் பள்ளிகளிலும் 9 வட்டார மொழிகளைக் குறைக்க ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டனவாம்.

இந்தி தெரியாத அதிகாரிகளைத் தவிர மற்ற அனைவரும் 'பைல்'களில் இந்தியிலேயே குறிப்பு எழுதுவது உடனடியாகச் செயலுக்கு வருமாம்.

இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டிராத அதிகாரிகளுக்கு மட்டுமே விதிவிலக்கு அளிக்கப்படுமாம்.

சம்பளப் பட்டியலிலும், பிற கணக்குப் புத்தகங்களிலும் இந்தியிலேயே கைச்சாத்திட வேண்டுமென எல்லா அதிகாரிகளுக்கும கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

அரசு கருவூலத்துக்கும், ரிசர்வ் பாங்கிக்கும தங்கள் இந்திக் கையெழுத்துக்களை உறுதிப்படுத்தும வகையில் அனுப்பி வைக்குமாறு அதிகாரிகளுக்குத் தாக்கீது அனுப்பப்பட்டுள்ளதாம்.

இனி எந்தப் பிரச்சினை வந்தாலும் எளிதில் விடமாட்டோம்

தி. மு. க. உறுப்பினர்களின் வாதங்களில் புதிய திருப்பத்தைக் காணலாம்

தி. மு. க. குழுவின் துணைத் தலைவர் மனோகரன் தரும் செய்தி

புதுடில்லி, டிச. 23—
"மக்களவையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களின் வாதங்களில் சில புதிய திருப்பத்தை எதிர்பார்க்கலாம்"

என்று மக்களவை தி. மு. க. குழுத் துணைத் தலைவர் திரு. கி. மனோகரன், செய்தியாளரிடம் கூறினர்.

மக்களவையில் மொழிப் பிரச்சினை மற்றும் தமிழ்நாடு சம்பந்தப்பட்ட விவகாரங்கள் வரும்போது மட்டும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பங்கெடுத்துக் கொள்கிருர்கள்; மற்ற விவகாரங்களைப் பற்றிய விவாதங்களின்போது தி. மு. க. உறுப்பினர்கள் கலந்துகொள்வதில்லை என்ற பொதுவான கருத்து தலைநகரில் அரசியல் பார்வையாளர்களிடம் நிலவி வருகிறது.

"இனிமேல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாதங்களில் ஒரு திருப்பத்தைக் காணலாம்; வட்டார தன்மையை விட்டுவிட்டு இனி எல்லா மசோதாக்களின் மீதும் நடைபெறுகிற வாதத்தில் தி.மு.க. உறுப்பினர்கள் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொள்வார்கள்.

தமிழ்நாட்டின் தீவிர உணர்ச்சிகளை தி. மு. க. எதிரொலிக்கிறது என்பதில் ஐயமில்லை. ஆனல் அதே சமயத்தில், நாட்டை எதிர்நோக்கியுள்ள மற்றப் பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தத் தவருது" என்றும் மனோகரன் கூறினர்.

"இது மக்களவையின் இரண்டாவது கூட்டத் தொடர்; பல்வேறு நடவடிக்கைகளையும் நாடாளுமன்ற மரபுகளையும் தி. மு. கழகப் புதிய உறுப்பினர்கள் கவனிக்கவேண்டியிருக்கிறது; பல இளம் உறுப்பினர்கள், நாடாளுமன்ற மரபுகளை நல்ல முறையில் நிலைநாட்டி வருகிருர்கள்" என்று அவர் மேலும் சொன்னர்.

மக்களவையில் வேறு உறுப்பினர்கள் சிலர், குழப்பம் செய்து தேவையின்றி வெளிநடப்பு செய்யும் வழக்கத்தை மனோகரன் கண்டித்தார்.

ஹெலிகாப்டர் வேண்டுமா?

தற்போது தன்வசமுள்ள ஹெலிகாப்டரை விற்றுவிட்டு, வேறொன்றைப் புதிதாக வாங்க விரும்புகிறது மகாராட்டிர அரசு!

ஆனல், இருக்கிற ஹெலிகாப்டரை விற்கமுடியாமல் திணறுகிறது—அந்த அரசாங்கம்!

'நல்ல விலை கோரப்படவில்லை' என்பதே அதற்குக் காரணம்.

கொய்னு விபத்து நிவாரண வேலைகளுக்கு உடனடியாகப் புதிய ஹெலிகாப்டர் தேவைப்படும் மகாராட்டிர அரசு, இருக்கிற ஒன்றை எப்படி விற்பது என்று திகைக்கிறது!

இந்தியாவின் இயலாமை -- கனடாவின் பெருந்தன்மை!

1958-ல் கொடுத்த கடனை அடியோடுவேண்டாமென்கிறது

கோதுமை இறக்குமதி செய்து கொண்ட வகையில் இந்தியா தரவேண்டியிருந்த பத்து இலட்சம் டாலர் கடன் தொகையை கனடா அரசு, 'வேண்டாம்' எனக் கூறிவிட்டது!

இந்தக் கடன் தொகை, 1958-ம் ஆண்டு முதல் தோன்றி வளர்ந்த கடனுகும்.

செலவைக் குறையுங்கள்

டிவிஎஸ் விநியோகிக்கும் மோட்டார் உறுப்புகளை வாங்குங்கள்



FERODO
Brake Linings



பஸ், லாரி சொந்தக்காரர்கள் எவரை வேண்டுமானலும் கேளுங்கள். டிவிஎஸ் விநியோகிக்கும் மோட்டார் உறுப்புகள் சிறந்தவை. நீண்ட நாள் உறுதியாக உழைக்கும்.

காரணம்: உறுப்பு உற்பத்தியாளர்களில் பெரும்பாலோர் தங்கள் தங்கள் துறைகளில் தலைசிறந்தவர்

உழைப்பிற்கு ஆராய்ச்சி செய்யப் பெற்ற உறுப்புகளையே டிவிஎஸ் விநியோகிக்கிறது.

TVS

டி வி சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட் மதுரை - திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர் - திருவனந்தபுரம் சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ் - பங்களூர் - செகந்திராபாத் (A.P.) மதராஸ் ஆட்டோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ் - பங்களூர் - விஜயவாடா

mas-4248

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்துகிருர்கள்! வேறென்றும் இல்லை! அவர்களுக்கு மொழியாவது — போராட்டமாவது!''

"காங்கிரசுப் பத்திரிகையும் சேர்ந்து, 'மொழிப் போராட்டம்' எனக்கூறுவது, எனக்கு இன்னென்றை நினைவுபடுத்துகிறது.''

"என்ன அது?''

"'திருடன், திருடன்'என்று பின்னல் துரத்திவரும் கூட்டத்தைச் சமாளிக்க முன்னல் ஓடிக்கொண்டிருக்கும் திருடன்—கண் இமைக்கும் நேரத்தில் — சாதுரியமாகக் கூட்டத்தினருடன் கலந்துகொண்டு, தானும் 'திருடன், திருடன்' எனக் குரலெழுப்பிக்கொண்டு ஓடுவானும்...''

"அதுபோல...!''

"அதுபோலத்தான், கண்டனத்துக்கு இலக்காகியுள்ள காங்கிரசுக் கட்சியின் பத்திரிகையும் சேர்ந்துகொண்டு, 'மொழிப் போர்—மொழிப் போர்' எனச் செய்தி போடுவதும்!''

—எஸ். ஆர்.

சென்னை-- இராயப்பேட்டை திருவள்ளுவர் மன்ற ஆண்டுவிழா

அண்ணு --- எம். ஜி. ஆர். கவியரங்கம்

சென்னை--இராயப்பேட்டை திருவள்ளுவர்மன்ற ஒன்பதாம் ஆண்டு கிறைவு விழாவும், பேரறிஞர் அண்ணு—புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். ஆகியோர் படத் திறப்பு விழாவும், 24—12—67 காலை 9-மணிக்கு மயிலை இராஜேசுவரி மண்டபத்தில் நடைபெறும்.

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் தலைமையில் எம். ஜி. ஆர். பற்றிய கவியரங்கமும், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமையில் அண்ணு பற்றிய கவியரங்கமும் நடைபெறும்; ஆர், எம். வீரப்பன் வரவேற்புரையாற்றுவார்; குடந்தை சீனிவாசன் இன்னிசை வழங்குவார்; பன்னிரண்டு புகழ்பெற்ற கவிஞர்கள், கவியரங்குகளில் பங்கு கொள்கிருர்கள்.

சென்னை 4-வது வட்டத்தில் மக்கள் திலகம் மன்றம் துவக்க விழா

24—12—67 மாலை 6-மணிக்கு, வண்ணை—சஞ்சீவிராயன் கோயில் தெரு, எண் 118-ல், வட்ட தி.மு.க. செயலாளர் பி. கே. மூர்த்தி தலைமையில் மக்கள் திலகம் மன்றத்தை, தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மு. வேதாசலம் துவக்கிவைப்பார்; த. சேதுராசன், கே. எம். கண்ணபிரான், கே. முத்து, கே. குசால்தாசு, இ. இராசகோபால் ஆகியோர் பேசுவர்.

அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்களுக்கு வரவேற்பு--- மின்விளக்கேற்று விழா

திருவானைக்காவல் பேரூராட்சி மன்றம், 24—12—67 மாலை 6-மணிக்கு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்களுக்கு, பேரூராட்சி மன்றத்தில் வரவேற்பு அளிக்கும்; அதுபோது அமைச்சர் மதியழகன் அவர்கள், மின்விளக்கேற்று விழா வாற்றுவார்.

ஜனசங்க மாநாட்டுக்கு முஸ்லிம் பிரதிநிதிகள்!

கள்ளிக்கோட்டையில் நடைபெறவிருக்கும் அனைத்திந்திய ஜனசங்க மாநாட்டில், ஆந்திராவினின்றும் 15 முஸ்லிம் பிரதிநிதிகள் (ஜனசங்கக் கட்சியைச் சேர்ந்தவர்கள்) கலந்துகொள்ள இருக்கிருர்கள்.

கேரள மாநிலத்திலிருந்து மொத்தம் 4,000 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்வார்கள என எதிர்பார்க்கப்படுகிறது.

எழுச்சியுள்ள மாணவரிடையே வன்செயல்களை தூண்டும் சமூக விரோதிகள்

அமைச்சர் மு. கருணநிதி

கிளர்ச்சியை நிறுத்தி அமைதி காக்க அறிவுரை

சென்னை, டிச. 22—

"அறிஞர் அண்ணு அவர்கள் சுற்றுப்பயணத்திலிருந்து திரும்பியதும், எல்லாக் கல்லூரி மாணவர்களின் பிரதிநிதிகளையும் கூட்டி, மொழிப் பிரச்சினை குறித்து அவர்களுடன் விரிவான முறையில் விவாதிக்க இருக்கிருர்; இன்னும் இரண்டொரு நாட்களிலேயே இதற்கு ஏற்பாடு செய்யப்படும்; எங்களிடம் பொறுப்புக்களை ஒப்படைத்துவிட்டுப் போராட்டத்தை நிறுத்துங்கள்''

என்று மாணவர்களிடையே பொதுப் பணித்துறை அமைச்சர் திரு மு. கருணநிதி அவர்கள் கேட்டுக்கொண்டார்.

சென்ட்ரல் இரயில் நிலையத்தில் மாணவர்கள் கூடிநின்று, இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்துவதாகச்செய்தியறிந்து இன்று 12-45 மணிக்கு திரு. கருணநிதி அங்கு சென்ருர்; அவருடன் திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பியும் சென்ருர். காவல்துறைத் தலைமை அதிகாரி எப். வி. அருளும், ஆணையர் குப்புசாமியும் சென்றிருந்தனர்.

அங்கு மாணவர்களை அமைதியாக இருக்குமாறு அமைச்சர் கேட்டுக்கொண்டு அறிவுரைகள் வழங்கினர்.

அமைச்சரின் அறிவுரை கேட்டு மாணவர்களும் அமைதி காத்தனர்.

சென்ட்ரல் இர்யில் நிலபத்தில் மாணவர்களால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பம்பாய் எக்ஸ்பிரஸ் வண்டி பிற்பகல் 2-மணிக்குப் புறப்பட்டுச் சென்றது.

மாணவர்கள் குழுமியிருந்த இடத்துக்கு அமைச்சர் சென்றதும் 'அண்ணு வாழ்க' — 'கருணநிதி வாழ்க' — 'இந்தி ஒழிக' — 'தமிழ் வாழ்க' என மாணவர்கள் முழக்கமிட்டனர்.

அங்கு உயரமான ஓர் இடத்தில் ஏறி நின்று அமைச்சா கருணநிதி பேசினர். அவர் தம் உரையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழ்நாட்டில் கடந்த நான்கு நாட்களாக நீங்கள் நடத்திய போராட்டங்கள் தமிழகத்தில் எவ்வளவு இந்தி எதிர்ப்பு உணர்ச்சி உள்ளது என்பதை எடுத்துக்காட்டிவிட்டது.

இந்தி எதிர்ப்பு அறப்போரில் ஈடுபட்டு தங்கள் இன்னுயிரீந்த தியாகச் செம்மல்களாம் இராசேந்திரன், சாரங்கபாணி ஆகியோர் பெயரால் கேட்டுக்கொள்கிறேன்—தமிழக அரசு இந்திக்கு கடுகளவும் ஆதரவாக இல்லை; இதனை நீங்கள் நன்கு அறிவீர்கள்; இப்படியிருந்தும், கடந்த இரண்டு நாட்களாக நாங்கள் உறுதியளித்த பிறகும் —பேரறிஞர் அண்ணு, மூதறிஞர் இராஜாஜி ஆகியோர் கூறிய பிறகும்—அமைதியாக இருப்பதே உங்கள் கடமையாகும்.

இன்னும் இரண்டு—மூன்று நாட்களுக்குள் தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு நிலைபற்றித் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட இருக்கிருர்கள்; இந்த நிலையில், இனிமேலும் நீங்கள் போராட்டத்திலோ, கிளர்ச்சியிலோ ஈடுபடுவது முறையல்ல.

நான் உங்களைப் பணிவோடு வேண்டிக்கொள்கிறேன்—உங்களை விட்டுப் பிரிந்து, 'அமைச்சராக இருக்கிறேன்' என்ற முறையில் அல்ல—அல்லது அதிகாரத்தால் அல்ல—'உங்களில் ஒருவன்' என்ற முறையில்—உங்கள் இரத்தத்தோடு இரத்தம்—நரம்போடு நரம்பு—தசையோடு தசை—என்ற முறையில் தாள் பணிந்து கேட்டுக்கொள்கிறேன் —உங்களது போராட்டத்தைக் கைவிடுங்கள்.

நீங்கள் இந்தி எதிர்ப்பு முழக்கங்களை இரயில் பெட்டிகளிலோ, பஸ்களிலோ, மதில் சுவர்களிலோ எழுதிவிடுவதால் எதிர்ப்பைக் காட்டிவிட இயலாது; 'மத்திய அரசில் உள்ளவர்களின் உள்ளத்தில் அது எழுதப்படவேண்டும்' என்பதை நானும் அறிவேன்; எனவே, இத்துடன் உங்களது போராட்டங்களை நிறுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதாவை மறுபரிசீலனை செய்யும்படி நாடாளுமன்றக் கழக உறுப்பினர்கள் இந்திரா காந்தியிடம் வற்புறுத்திக் கூறி வருகிருர்கள்; ஆகையால் அது பற்றியும் கவலைகொள்ள வேண்டாம்.

உங்களோடு இந்தியை எதிர்க்க இன்றே எங்கள் பதவியைவிட்டு விலகி வரத் தயார்; ஆனல் ஒன்று மட்டும் உறுதி; நாங்கள் அவ்வாறு பதவி விலகினல், திரும்பவும் தமிழகத்தில் இந்தி எதிர்ப்பு அரசு அமையுமா?— 'இந்திக்கு ஆதரவு அளிக்கும் அரசு அமையும்' என்ருல், அதை நீங்கள் விரும்புகிறீர்களா?

[இவ்வாறு அமைச்சர் கருணநிதி கேட்டதும், கூடியிருந்த மாணவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில், 'இல்லை, இல்லை' என்று ஒருசேரக் குரல் எழுப்பினர்கள்]

அமைச்சர் தொடர்ந்து கூறியதாவது:—

"அப்படியானல் பொறுப்பை எங்களின்மீது சுமத்திவிட்டு அமைதியாக இருக்கும்படி வேண்டுகிறேன். இரயிலைப் போகவிடுங்கள்—அமைதியாகக் கலைந்து செல்லுங்கள்.''

பிறகு பெரம்பூர் இரயில் நிலையத்திற்கு அமைச்சர் கருணநிதி சென்ருர்; அங்கு கூடியிருந்த மாணவர்களைச் சந்தித்துக் கலைந்து செல்லும்படி கேட்டுக் கொண்டார்.

கிளர்ச்சி ஒத்திவைப்பு

மாணவர்கள் முடிவு

சென்னை, டிச. 22—

நடைபெற்றுவரும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை ஒத்திவைப்பது என்று இன்று சென்னையில் நடைபெற்ற அனைத்துக் கல்லூரி மாணவர் மன்றக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

அனைத்துக் கல்லூரி மாணவர் மன்றத்தின் அவசரக் கூட்டம் இன்று பிற்பகல் நடந்தது; அக்கூட்டத்தில்தான் இம்முடிவுசெய்யப்பட்டது.

மொழிப் பிரச்சினையில் மாணவர்களுடைய கோரிக்கையின்பால் உறுதியாக நிற்பது என்று தமிழக அரசு எடுத்துள்ள தீவிரமுடிவினைக் கருதியும், கிளர்ச்சியில் சமூக விரோத சக்திகள் இடையில் புகுந்துவிடலாம் என்கிற அச்சத்தாலும், நகரில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டிற்காக அமைதியான சூழ்நிலை உருவாக வேண்டுமென்பதாலும் நடந்துவருகிற கிளர்ச்சியை ஒத்திப் போடுவது என்று அனைத்துக் கல்லூரி மாணவர் மன்றம் முடிவு செய்தது.

கோட்டை முன்னே மாணவர் அணிவகுப்பு

அமைச்சர்கள் செ. மாதவன், மா. முத்துசாமி சந்திப்பு

சென்னை, டிச. 22--

புதுக் கல்லூரி, கிண்டி தொழிற்பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள், இன்று கோட்டைக்கு ஊர்வலமாக வந்தனர்; கோட்டை எதிரே 'இந்தி அரக்கி' கொடும்பாவியைக் கொளுத்தினர்.

அமைச்சர்கள் செ. மாதவனும், மா. முத்துசாமியும் அவர்களை, அரசுச் செயலகத்துக்கு வெளியே வந்து சந்தித்தனர்.

மாணவர்களிடையே அமைச்சர் மாதவன் பேசுகையில், மாணவர்களின் இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை அரசு நன்கு உணர்ந்துள்ளது என்றும், ஆங்கிலம் தொடர்ந்து இணைப்பு மொழியாக இருக்கும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்ற நிலையையே தமிழக அரசு கொண்டிருக்கிறது என்றும், இதற்குமேல் என்ன வேண்டும் என்று மாணவர்கள் விரும்பினலும், அது பற்றி அவர்கள் கூடித் தங்களுக்குள் விவாதித்து ஒன்றுபட்ட கருத்தை அரசிடம் தெரிவித்தால் அரசு பரிசீலிக்கும் என்றும் தெரிவித்து கிளர்ச்சியைக் கைவிடுமாறு அறிவுரை கூறினர்.

சென்னை, டிச. 22—

"மாணவர்களிடையே நுழைந்துகொண்டு, வன்செயல்களைத் தூண்டிவிடுகின்றவர்கள் யார் என்பதுபற்றித் தமிழக அரசுக்குத் தெரியுமா? இது குறித்து துப்பறியும் போலீசுப் பிரிவின் அறிக்கை அரசுக்கு வந்துள்ளதா?''

என்று, தமிழகப் பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணநிதி அவர்களிடம், செய்தியாளர்கள் கேட்டனர்.

"ஆம்; தூண்டிவிடுபவர்கள் பற்றிய இரகசிய அறிக்கை வந்திருக்கிறது''

என்று அமைச்சர் கருணநிதி பதிலளித்தார்.

தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் முயற்சி!

இந்திராவுக்குக் காங்கிரசு உறுப்பினர்கள் கடிதம்

புதுடில்லி, டிச 22—

ஆட்சி மொழித் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மாற்றி, இந்தி பேசும் மாநிலங்களையும் இந்தி பேசாத மாநிலங்களையும் சமமாக மதிக்கத்தக்க வகையில் ஏற்பாடு செய்யுமாறு நாடாளுமன்ற காங்கிரசு உறுப்பினர்கள் 50 பேர் கையெழுத்திட்டுத் தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கு மடல் அனுப்பியுள்ளனர்.

மக்களவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து தாங்கள் அஞ்சுவதாகவும், ஏனெனில் அதனல் ஏற்படும் பாரபட்சம், இளந்தலைமுறையினரைக் கடுமையாகப் பாதித்து நாட்டுப் பிரிவினையை ஏற்படுத்தும் என்றும் அவர்கள் தங்கள் அறிக்கையில் கூறியுள்ளனர்.

நடக்க இருப்பவை

24--12--67

பெங்களூர்

எம். ஜி. ஆர். மன்ற முதலாண்டு விழா; மாலை 5-30 மணிக்கு டாக்டர் ராயன் ரோடு 2-வது வீதியில்; தலைவர்: மா. மன்னர்; பேசுவோர்: தமிழரசி பி.ஏ., திராவிடமணி, எஸ். வி. பதி, கி. சோழன், வே. இளஞ்சேரன், ஏ. கண்ணன், எஸ். நாராயணன்.

திண்டுக்கல்

12-வது வட்டார தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு வடக்கு மேட்டுராசப்பட்டி வானொலித் திடலில்; தலைவர்: நா. தயாநிதி; பேசுவோர்: கூடலரசன், மு. காதர்சா பி ஏ., அ. பாலமுருகேசன் பி.ஏ.பி.எல்., க. வே. வி. இராசன், கே. பி. கே. சாமி, ஏ. ஜோசப்.

வெள்ளக்கிணறு

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு வி. சி. வி. திடலில்; தலைவர்: வி. கே. வேலுசாமி; பேசுவோர்; அமைச்சர் கே. ஏ. மதியழகன், பி. வேலுசாமி எம்.எல்.ஏ., சே. அ. இராசமாணிக்கம் எம்.சி., இரா. மோகன், நா. பழனியப்பன், மற்றும் பலர்.

திருவரங்கம்

15-வது வட்ட தி. மு. க.— எம். ஜி. ஆர். மன்றம் ஆகியவை சார்பில் மாலை 6-30 மணிக்கு திருவானைக்காவல் நெல்சன் ரோடில்; தலைவர்: க. இராசவேலு எம். ஏ. பி. எல்.; பேசுவோர்: வெ. கண்ணன், அன்பில் தருமலிங்கம், எம். எஸ். மணி எம்.எல்.ஏ., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., எஸ். எம். வி. சாமி, தா. துரைசாமி, மு. நடராசன், ஏ. பொன்னுசாமி, மற்றும் பலர்.

25--12--67

மதுரை

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு மேலப் பொன்னகரம் 6-வது தெருவில்; தலைவர்: கோ. பாண்டியன்; பேசுவோர்: புலவர் பொன்னிவளவன், எஸ். முத்து எம்.எல்.சி., பி. எஸ். மணியன் பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., எம். எம். முத்தரசு, மற்றும் பலர்.

26--12--67

அந்தியூர்

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு தேரடித் திடலில்; தலைவர்: எஸ். ஆர். பொன்னுசாமி பி.ஏ.பி.எல்.; பேசுவோர்: பெ. சீனிவாசன் எம்.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., ஈ. எம். நடராசன் பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., ஜி. பி. வெங்கிடு எம்.சி., அ. க. துரைராசு, மற்றும் பலர்.

இந்திரா காந்தி கூறும் சமாதானம்!

அண்ணுவுடன் தொலைபேசியில் பேச முயற்சி

புதுடில்லி, டிச. 23—

தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி தொடர்ந்து நீடித்ததையறிந்த தலைமையமைச்சர் இந்திரா காந்தி ஆழ்ந்த கவலையடைந்தவராய், நேற்று அண்ணு அவர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசப் பலமுறை முயன்றிருக்கிருர்; ஆனல் அண்ணு அவர்கள் நகரில் இல்லாததால் கவர்னர் உஜ்ஜல் சிங்குடன் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு பேசினர்.

தமிழகத்தில் நிகழ்ந்துள்ள இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகள் குறித்துத் தாம் பெரிதும் கவலை கொண்டிருப்பதாக முதலமைச்சரிடம் தெரிவிக்குமாறு அவர், கவர்னரைக் கேட்டுக்கொண்டாராம்.

நேற்று நாடாளுமன்ற மேலவையில் உள்துறையமைச்சர், 'நாட்டு மக்களிடையே பாரபட்சம் காட்டப்படமாட்டாது' என்றும், 'இந்தி பேசாத மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள்' என்றும், 'அவர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை' என்பதையும் விளக்கியிருப்பதன் மூலம் தென்னக மக்களுக்கு உறுதியளித்திருப்பதாக இந்திரா காந்தி, தமிழக நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். டி. பார்த்தசாரதியிடம் கூறினராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.